**மீள்பார்வை பயிற்சி**

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. ரஹ்மான் 108 ஆப்பிள்கள் வாங்கினார். அவற்றில் $\frac{1}{9}$ ஆப்பிள்கள் அழுகி விட்டன. 15 ஆப்பிள்களை அவர் தன் அண்டை வீட்டாருக்குக் கொடுத்தார். னவரிடம் மீதமிருக்கும் பழங்கள் எத்தனை?

   A 35　　B 46　　C 81　　D 96

2 ஆனந்தன் RM68 வைத்திருந்தான். அது சல்மான் வைத்திருந்ததை விட 15% குறைவாகும்.
சல்மானிடம் உள்ள தொகையைக் கணக்கிடுக.

   A RM148　　B RM80　　C RM75　　D RM12

3 அட்டவணை 1, கமல் பெற்ற புள்ளிகளைக் காட்டுகிறது.

| பாடம் | புள்ளி |
|---|---|
| ஆங்கிலம் | 86 |
| அறிவியல் | 94 |
| கணிதம் | |

அட்டவணை 1

கமல் மூன்று பாடங்களிலும் பெற்ற சராசரி புள்ளிகள் 85 எனின் அவன் கணிதத்தில் பெற்ற புள்ளிகள் எத்தனை?

   A 70　　B 75　　C 80　　D 90

4 சல்மா $5\frac{1}{2}$ m நீளம் கொண்ட ஒரு துணியை வாங்கினார். அதில் அவர் 3.05 m துணியை ஓர் ஆடை தைக்க பயன்படுத்தி விட்டார்.
மீதமிருக்கும் துணியின் நீளம், mஇல், எவ்வளவு?

   A 4.15　　B 2.55　　C 2.45　　D 2.0

5 ஒரு தேர்வில் 40 கேள்விகள் கேட்கப்பட்டன. முகிலன் அந்த தேர்வில் 90% புள்ளிகளைப் பெற்றான்.
அப்படியானால் அவன் எத்தனை கேள்விகளுக்குச் சரியாக பதிலளித்திருப்பான்?

   A 30　　B 35　　C 36　　D 38

6 அட்டவணை 2, சந்திரன் வாங்கிய பொருள்களின் பற்றுச் சீட்டைக் காட்டுகிறது.

| எண்ணிக்கை | பொருள் | ஒன்றின் விலை | விலை |
|---|---|---|---|
| 1 | பேனா | RM4.80 | |
| 2 | கத்தரிக்கோல் | RM5.50 | |
| 2 | புத்தகம் | RM2.30 | |
| | | **மொத்தம்** | |

அட்டவணை 2

சந்திரன் கடைக்காரரிடம் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையைக் கணக்கிடுக.

A RM20.40 B RM12.60 C RM11 D RM4.60

7 சப்ரி தன் வீட்டை 136 நாள்களில் கட்டி முடிக்க திட்டமிட்டார். இருப்பினும் அவர் வீடைக் கட்டி முடிக்க 26 வாரம் 5 நாள் ஆனது.
அவர் திட்டமிட்டதை விட எத்தனை நாள்கள் தாமதமாக கட்டி முடித்தார்.

A 46 B 51 C 131 D 187

8 ஒரு தேர்வில் 12 மாணவர்கள் தோல்வி அடைந்தனர். 80% மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.

தேர்வு எழுதிய மாணவர்கள் எத்தனைப் பேர்?

A 68 B 60 C 48 D 12

9 அட்டவணை, P, Q, R, S எனும் நான்கு கம்பிகளின் நீளத்தைக் காட்டுகிறது.

| கம்பி | நீளம் (மீட்டர்) |
|---|---|
| P | 240m |
| Q | 60 m |
| R | S கம்பியின் நீளத்தில் %50 |
| S | P கம்பியின் நீளத்தில் 40 m குறைவு |

அந்த நான்கு கம்பிகளின் நீளத்தின் சராசரியை, mஇல், கணக்கிடுக.

A 150 B 130 C 125 D 110